உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

காவல் துறை மானியக் கோரிக்கை எண். 22

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
மானியக் கோரிக்கை எண். 23

# அறிவிப்புகள்
# 2022–2023

உள் மதுவிலக்கு மற்றும்
ஆயத்தீர்வைத் துறை

காவல்துறை
மானியக் கோரிக்கை எண். 22

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை
மானியக் கோரிக்கை எண். 23

அறிவிப்புகள்

2022 - 2023


# மு.க. ஸ்டாலின்

முதலமைச்சர்



©

தமிழ்நாடு அரசு
2022

# காவல்துறை

# I. புதிய முயற்சிகள்

## 1. ஒருங்கிணைந்த சுங்கச் சாவடி கண்காணிப்பு மையம் அமைத்தல்

தேசிய நெடுஞ்சாலைகளில் செல்லும் வாகனங்களை கண்காணிப்பதும், மாநிலம் முழுவதும் உள்ள 55 சுங்கச் சாவடிகள் மற்றும் அண்டை மாநில எல்லையில் அமைந்துள்ள 50 வாகன சோதனைச் சாவடிகளுடன் இணைந்து தானியங்கி நம்பர் பிளேட் கேமராக்களை நிறுவுவதன் மூலம் போதைப் பொருள் கடத்தல்காரர்கள், வெளி மாநில குற்றவாளிகள் மற்றும் கடத்தல் சம்பவங்களில் ஈடுபடுவோர் போன்றவர்களின் நடவடிக்கைகளை கட்டுக்குள் கொண்டுவர உதவிடும் வகையில் தேசிய அளவில் ஒரு முன்னோடி திட்டமாக ஒருங்கிணைந்த சுங்கச் சாவடி கண்காணிப்பு மையம் ரூபாய் 9 கோடி செலவில் அமைக்கப்படும்.

**2. ஒவ்வொரு மண்டலத்திற்கும் நடமாடும் ஆளில்லா விமான அலகு (Drone) காவல் படைப்பிரிவினை விரிவு படுத்துதல்**

மாநகரங்களில் நெரிசலான பகுதிகள் மற்றும் போக்குவரத்தை கண்காணிக்கவும், இன்னல் அழைப்புகளுக்கு பதிலளிக்கும் நேரத்தை குறைப்பதில் கள காவல் அதிகாரிகளுக்கு உதவவும், மிக முக்கிய நபர்களின் வழித்தடங்கள் மற்றும் குற்றம் நிறைந்த பகுதிகளில் கண்காணிப்பு பணி மேற்கொள்ளவும், தீ விபத்தின்போது உயரமான கட்டிடத்தில் சிக்கியுள்ள மக்களை மீட்கவும், அவசர காலங்களில் நீரில் மூழ்கும் குழந்தைகள் மற்றும் பெரியவர்களை மீட்கவும் **நடமாடும் ஆளில்லா விமான அலகு (Drone) காவல் படைப்பிரிவு ரூபாய் 1.20 கோடி செலவில்** விரிவுபடுத்தப்படும்.



**3. சென்னை பெருநகரக் காவலில் 3 வழித் தடங்களில் போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் (TROZ - Traffic Regulation Observed Zone) அமைத்தல்**

சென்னை பெருநகரக் காவல் அண்ணா நகர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதைப் போல மோட்டார் வாகன சட்ட விதி மீறல்களை போக்குவரத்து ஒழுங்குமுறை கண்காணிப்பு மண்டலம் மூலம் சிறப்பாக செயல்படுத்திட சென்னை பெருநகரக் காவலில் மேலும் 3 வழித்தடங்களில் இம்மண்டலங்களில் **ரூபாய் 10.50 கோடி** செலவில் நிறுவப்படும்.

**4. போதைப் பொருள் தடுப்பு, Cyber Crime, பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் மற்றும் சாலை விழிப்புணர்வு போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்**

சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகள், வழக்கமான குற்றங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், இணையதள குற்றங்கள் மற்றும் போதைப் பொருட்கள்,

மதுவிலக்கு, சமூக நீதி, சாலைப் பாதுகாப்பு ஆகியன தொடர்பாக காவல் துறை பல்வேறு **விழிப்புணர்வு பிரச்சாரங்களை பொது மக்களிடையே நடத்துவதற்கென தொடர் செலவினமாக ரூபாய் 2 கோடி** வழங்கப்படும்.

**5. இளம் மற்றும் முதல் முறை குற்றவாளிகளுக்கு மறு வாழ்வு அளிக்கும் "பறவை" என்னும் முன்னோடித் திட்டத்தைச் செயல்படுத்துதல்**

சட்டத்திற்கு முரணாக செயல்படும் 18 முதல் 24 வயதுக்குட்பட்ட இளம், சிறு மற்றும் முதல் முறை குற்றவாளிகளுக்கு தனிநபர் மற்றும் குடும்ப ஆலோசனை, உளவியல் ஆலோசனை, இலவச சட்ட உதவி, வேலை வாய்ப்பு உள்ளிட்ட சேவைகளை வழங்கும் ஒரு முன்னோடி திட்டத்தை சிறைத்துறை, சமூக நலத்துறை, அரசு சாரா அமைப்பு மற்றும் தமிழ்நாடு மாநில சட்ட சேவைகள் ஆணையத்துடன் இணைந்து இளம் குற்றவாளிகளை மீளுருவாக்கம் செய்ய **"பறவை"** என்கிற முன்னோடித் திட்டம் **ரூபாய் ஒரு கோடி** செலவில் செயல்படுத்தப்படும்.



**6. இணையவழி குற்றங்களைக் கண்டறிந்து தக்க நடவடிக்கை எடுக்க " இணைய எச்சரிக்கை செயலி" மற்றும் " இணைய பாதுகாப்பு முகப்பு" உருவாக்குதல்**

இணைய மற்றும் கைப்பேசி அடித்தளத்தில் இயங்கும் செயலிகளைப் பயன்படுத்தி சில கும்பல்களால் இணைய வழி மோசடிகள் செய்யப்படுவதைத் தடுக்கும் விதமாக, இணைய வழிக்குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளின் தரவுகளை உள்ளீடு செய்து குற்றவாளிகளின் தடயங்களான வங்கிக் கணக்குகள், சமூக ஊடகக் கணக்குகள், மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி எண்கள் அடிப்படையில் குற்றவாளிகள் குறித்து எச்சரிக்கை செய்திட **ரூபாய் 30 இலட்சம்** செலவில் செயலிகள் உருவாக்கப்படும்.

7. **சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளை கண்காணித்து தக்க நடவடிக்கை எடுக்க "பருந்து" என்ற செயலி உருவாக்குதல்**

சரித்திரப் பதிவேடு குற்றவாளிகளின் தற்போதைய நிலையை அறியவும் (சிறை / பார்வைக்கு அப்பால்), அவர்களின் குற்றச் செயல்கள், பழிக்குப்பழிக் கொலைகள் மற்றும் கட்டப் பஞ்சாயத்தில் ஈடுபடுபவர்களின் நடத்தையை கண்காணித்து, தக்க நடவடிக்கை எடுக்கவும் அவர்களுக்கு எதிரான பிடியாணைகளை நிறைவேற்றவும், நிலுவை வழக்குகளை கண்காணிக்கவும் **ரூபாய் 33 இலட்சம்** செலவில் **"பருந்து"** என்ற செயலி உருவாக்கப்படும்.

8. **காணாமல் போன மற்றும் திருட்டு வாகனங்களை கண்டறியும் செயலியை உருவாக்குதல்**

காணாமல் போன மற்றும் திருட்டு வாகனங்களின் தரவுகளை உருவாக்கி A N P R (தானியங்கி வாகன எண் வாசிப்பான்) கேமராக்களை நிறுவி அதில் இத்தரவுகளை உள்ளீடு செய்வதன் மூலம் காணாமல் போன, திருட்டு மற்றும் சந்தேகத்திற்கிடமான வாகனங்களை



கண்காணித்து அடையாளம் காணும் விதமாக **"ஒருங்கிணைந்த வாகன கண்காணிப்பு அமைப்பு"** செயலி ஒன்று **ரூபாய் 2 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

9. **மதுவிலக்கு அமலாக்கப்பிரிவை, போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவுடன் இணைத்து 'போதைப் பொருள் தடுப்பு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவாக' மறுசீரமைத்தல்**

மாநிலத்தில் பொதுமக்களிடையே போதைப் பொருட்கள் உபயோகத்தையும், புழக்கத்தையும் தடுக்கும் பொருட்டு மதுவிலக்கு அமலாக்கப் பிரிவையும் போதைப் பொருள் நுண்ணறிவு பிரிவையும் இணைத்து மேம்படுத்தி **"போதைப்பொருள் தடுப்பு மற்றும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவாக"** **மறுசீரமைக்கப்படும்.**

**10. சென்னை அசோக் நகரில் செயல்பட்டு வரும் காவலர் பயிற்சிக் கல்லூரி (PTC) வண்டலூர் அருகே உள்ள உயர் காவல் பயிற்சியக வளாகத்திற்கு (Tamil Nadu Police Academy) மாற்றப்படும்**

காவலர்களுக்குப் பயிற்சி அளிக்கும் காவலர் பயிற்சி கல்லூரி வண்டலூர் அருகே உள்ள ஊனமாஞ்சேரியில் செயல்பட்டுவரும் உயர் காவல் பயிற்சியக வளாகத்திற்கு மாற்றப்படும் இதன்மூலம் இவ்வளாகம் காவல் துறையின் ஒருங்கிணைந்த பயிற்சி வளாகமாக செயல்படும்.

**11. சிறப்பு புலனாய்வுக்கு உதவும் நிபுணர்களை பணியமர்த்துவதற்கான விசாரணைக் கட்டணங்கள் தொடர்பாக அதிகாரிகளின் அனுமதி அதிகாரத்தை உயர்த்துதல்**

புலனாய்வில் சிறந்த ஆலோசகர்களின் நிபுணத்துவ ஆலோசனை தேவைப்படுகிறது. மேலும், பொருளாதார/ இணைய வழி குற்றங்கள்/ சிறப்புக் குற்றங்களில் ஆதாரங்களைக் கண்டு பிடிப்பதற்கு புலனாய்வு அதிகாரிக்கு உதவுவதற்கு தொழில் முறை மற்றும் தொழில்நுட்ப உதவி தேவை. இந்த **ஆலோசகர்கள் / நிபுணர்களுக்கான தொகையினை அனுமதிக்கும் தற்போதுள்ள விசாரணை அலுவலர்களின் அனுமதி அதிகாரம் உயர்த்தப்படும்.**



**12. குற்ற வழக்குகள், மதுவிலக்கு வழக்குகள் மற்றும் உணவுப் பொருள் கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்த வாகனங்களை ஏலம் விடுதல் முறையை எளிமையாக்குதல்**

குற்ற வழக்குகளில் தொடர்புடைய அதிக எண்ணிக்கையிலான வாகனங்கள் காவல் நிலையங்களில் உள்ள மதிப்பு மிக்க இடத்தை ஆக்கிரமிப்பதுடன், சுற்றுப்புறங்களை அசுத்தப்படுத்துகின்றன. பறிமுதல் மற்றும் ஏல முறை சிரமமாக உள்ளதால் பெரும்பாலான வாகனங்கள் மோசமான நிலையில் உள்ளன. எனவே **கடத்தல் வழக்குகளில் பறிமுதல் செய்த வாகனங்களை ஏலம் விடும் முறை எளிமையாக்கப்படும்.**

**13. தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றும் ஆளினர்களுக்கு இடர்ப்படி தொகை உயர்த்தி வழங்குதல்**

காவலர் முதல் காவல் ஆய்வாளர் வரையிலானவர்களுக்கு இடர்ப்படியினை ரூ. 800-லிருந்து ரூ. 1,000-ஆகவும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் கூடுதல் காவல் கண்காணிப்பாளர்களுக்கு ரூ. 900-லிருந்து ரூ. 1,000-ஆகவும் உயர்த்தி கடந்த நிதியாண்டில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. இது **காவல் துறையில் உள்ள தொழில்நுட்பப் பிரிவில் பணியாற்றும் அனைத்து ஆளினர்களுக்கும் வழங்கப்படும்.** இதற்கான தொடர் செலவினம் **ரூபாய் 63 இலட்சம்.**



**14. திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு (OCIU) ஆளிநர்களுக்கு 5% சிறப்பு ஊதியமாக அளித்தல்**

நுண்ணறிவுப் பிரிவு என்பது தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை, சிறப்புப் பிரிவு குற்ற புலனாய்வுத்துறை, திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு, 'Q' பிரிவு, பாதுகாப்புப் பிரிவு குற்ற புலனாய்வுத்துறை, முதலமைச்சரின் தனி பாதுகாப்புப் பிரிவு ஆகியவை உள்ளடக்கியதாகும். திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவைத் தவிர மற்ற அனைத்து நுண்ணறிவு பிரிவு ஆளிநர்களும் சிறப்பு ஊதியமாக 5% பெறுகின்றனர். இதுபோல **திட்டமிட்ட குற்ற நுண்ணறிவுப் பிரிவு ஆளிநர்களுக்கும் 5% சிறப்பு ஊதியம்** வழங்கப்படும். இதற்கான தொடர் செலவினம் **ரூபாய் 1.16 கோடியாகும்.**

**15. காவல் ஆளினர்களுக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை இரட்டிப்பு**

காவல் துறையினருக்கு வழங்கப்படும் காப்பீட்டுத் தொகை பத்து ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளதால், அவர்களுக்கு இறப்பு மற்றும் விபத்தின் காரணமாக ஏற்படும் **நிரந்தர முழு உடல் ஊனத்திற்கு** வருடாந்திரம் **வழங்கப்படும் மொத்த காப்பீட்டுத் தொகையான ரூபாய் 30 இலட்சம், ரூபாய் 60 இலட்சமாக** உயர்த்தப்படும்.

**16. மாநிலத்தில் போதைப் பொருள் தடுப்பிற்கென மாண்புமிகு முதலமைச்சரின் பதக்கம் புதிதாக வழங்குதல்**

சமூகத்தில் **போதைப் பொருளை ஒழிப்பதற்காக** கடுமையாகவும் உண்மையாகவும் உழைக்கும் காவலர்கள் / அதிகாரிகளை ஊக்குவிப்பதற்கென **மாண்புமிகு முதலமைச்சரின் பதக்கம் புதிதாக** வழங்கப்படும்.



**17. காவலர்களுக்கான "மகிழ்ச்சி" என்ற நலச் செயல் திட்டத்தை செயல்படுத்துதல்**

சென்னை பெருநகர காவலில் பணிபுரியும் குடிப்பழக்கத்திற்கு ஆளான, தொடர் விட்டோடியாகும், தொடர் உடல் நலக் குறைவுக்கு ஆளாகும் மனநல சிகிச்சை தேவைப்படும் காவலர்களின் நல மேம்பாட்டிற்காக **"மகிழ்ச்சி"** என்ற செயல்திட்டம் **ரூபாய் 53 இலட்சம்** செலவில் செயல்படுத்தப்படும்.

**18. சென்னை பெருநகரில் பணிபுரியும் காவலர்களின் உடல் நலனை, மென்பொருள் மூலம் கண்காணித்தல்**

சென்னை பெருநகர காவல், காவலர் மருத்துவமனையில் சோதனைக் கூடங்கள் மட்டுமின்றி அனைத்து வகையான பொது நோய்களுக்கும் சிகிச்சை அளிக்க வசதி செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது காவல் ஆளினர்கள் / அதிகாரிகளின் வாழ்க்கைத் துணைவியர்க்கும் இலவச வருடாந்தர மருத்துவ பரிசோதனை செய்து கொள்கின்றனர். இந்த மருத்துவ

பதிவுகள் அனைத்தும் தொகுக்கப்பட்டு மென்பொருளில் நிர்வகிக்கப்படும். இதன்மூலம் காவலர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் உடல்நிலையை திறம்பட கண்காணிக்க இயலும். இதற்கான செலவினம் **ரூபாய் 46 இலட்சம்.**

**19. பெண் காவலர்களுக்கான பணி- வாழ்க்கை சமநிலை குறித்த பயிற்சியினை " ஆனந்தம் " என்கிற திட்டத்தின் மூலமாக வழங்குதல்**

சென்னை பெருநகர காவலில் தாலுகா பிரிவு / அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் / சிறப்பு அலகுகள் மற்றும் ஆயுதப் படையில் பணிபுரியும் பெண் ஆய்வாளர்கள், பெண் சார்பு ஆய்வாளர்கள் மற்றும் பெண் காவலர்களுக்கு பணி - வாழ்க்கை சமநிலை குறித்த பயிற்சி வழங்குவதன் மூலம் அவர்களின் வாழ்க்கை மற்றும் பணி இரண்டிலும் சிறப்பான சமநிலை பேணிடும் பொருட்டும், பணியை சிறப்பாக செய்யும் பொருட்டும் **"ஆனந்தம்"** என்னும் திட்டத்தின் மூலம் **ரூபாய் 34 இலட்சம்** செலவில் பயிற்சி வழங்கப்படும்.



**20. சென்னை பெருநகரக் காவல் துறையில் பணியாற்றும் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் வசதிகள் ஏற்படுத்துதல்**

சென்னை பெருநகரக் காவல் துறையின் விளையாட்டு வீரர்கள், மண்டலங்களுக்கு இடையேயான, மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகள், சர்வதேச போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று பல பதக்கங்கள், கேடயங்கள், கோப்பைகள் மற்றும் விருதுகளை பெற்று தமிழ்நாடு காவல் துறைக்கு பெருமை பெற்றுத்தரும் நிலையில் அவர்களுக்கு பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் சர்வதேச தரத்திலான செயற்கை கூடைப்பந்து மைதானம் ஆகியவை **ரூபாய் 2 கோடி** செலவில் அமைக்கப்படும்.

**21. காவல் புகைப்படக் கலைஞர் பிரிவினை மறுசீரமைத்தல்**

காவல் புகைப்பட நிபுணர் பிரிவில் உள்ள பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு அவர்களின் கல்வித்திறன் மற்றும் நியமனங்களை வரைமுறைப்படுத்தி மேலும் சிறப்பாகப் பணியாற்றும் பொருட்டு **அப்பிரிவு மறுசீரமைக்கப்படும்.**

**22. தீயணைப்புத் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு காவல் துறை மருத்துவமனைகளில் மருத்துவம் பார்க்கும் வசதி ஏற்படுத்தித் தரப்படும்**

தமிழ்நாட்டிலுள்ள காவல் மருத்துவமனைகளில் காவல் ஆளிநர்களுக்கும் / அமைச்சுப் பணியாளர்களுக்கும் தரமான மருத்துவ வசதி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வசதியினை **தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.** இதன்மூலம் இவ்விரு துறையின் பணியாளர்களுக்கும் தரமான மருத்துவ சேவை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும்.



## III. வாகனங்கள் / உபகரணங்கள் கொள்முதல்

**23. கழிவு செய்யப்பட்ட காவல் நிலைய காவல் ஆய்வாளர்களுக்கான 200 ஜீப்புகளுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வழங்குதல்**

காவல் ஆய்வாளர்கள் களப்பணியின் போது பயன்படுத்திய ஜீப்புகள் கழிவு செய்யப்பட்டு, அதற்குப் பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்பட வேண்டியுள்ளதால், களப்பணியிலுள்ள அலுவலர்களுக்கான வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை போக்கும் விதமாக புதிதாக **200 ஜீப்புகள் ரூபாய் 20 கோடி** செலவில் வழங்கப்படும்.

**24. மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள காவல் நிலையங்களுக்கான 20 நான்கு சக்கர ரோந்து வாகனங்கள் வழங்குதல்**

ரோந்துப் பணியை மேம்படுத்தவும், பொதுமக்களின் அவசர அழைப்புகளை குறித்த நேரத்தில் கவனிக்கவும், தூத்துக்குடி, ஈரோடு, மற்றும் ஓசூர் மாநகராட்சி எல்லைக்குள் உள்ள **20 காவல் நிலையங்களுக்கு ரூபாய் 2 கோடி** தொடரா செலவினத்தில் **நான்கு சக்கர ரோந்து வாகனங்கள்** வழங்கப்படும்.

**25. தமிழகத்திலுள்ள அனைத்து நகராட்சிப் பகுதிகளிலுள்ள 278 காவல் நிலையங்களுக்கும் தலா ஒரு இருசக்கர ரோந்து வாகனம் வழங்குதல்**

ரோந்துப் பணிகளை மேம்படுத்தவும், குறிப்பாக நகரப் பகுதிகளிலுள்ள பொது மக்களின் அவசர அழைப்புகளுக்கு விரைந்து செயல்படவும் ஏதுவாக தமிழ்நாட்டில் உள்ள **139 நகராட்சிகளில் உள்ள 278 காவல் நிலையங்களுக்கும் தலா ஒரு இரு சக்கர வாகனம் என 278 இருசக்கர வாகனங்கள் ரூபாய் 3 கோடி** செலவில் வழங்கப்படும்.



**26. கடலோர ரோந்துப் பணிக்காக கடலோர பாதுகாப்பு குழுமத்திற்கு வழங்கப்பட்ட இயந்திர மற்றும் விரைவு இடைமறிப்பு படகுகள் பராமரித்தல்**

விரைவு இடைமறிப்புப் படகுகளின் தொடர் பயன்பாட்டினை உறுதி செய்வதற்கும், அவ்வப்போது ஏற்படும் கோளாறுகளை சரிசெய்வதற்கும், குறித்த இடைவெளியில் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் தொடர் செலவினமாக **ரூபாய் 5 கோடி** செலவிடப்படும்.

**27. நுண்ணறிவுப் பிரிவின் நான்கு அலகுகளில் களப்பணியாற்றும் காவல் ஆளிநர்களுக்கு 200 இரு சக்கர வாகனங்கள் வழங்கப்படும்**

நுண்ணறிவுப்பிரிவின் பணி மிகவும் சவாலானது மட்டுமல்லாமல் அவர்களின் பணி எல்லையானது மிகவும் பெரியது. அதிகாரிகள் கேட்கும் தகவல்களை சேகரிப்பதற்காக நெடும்

பயணம் மேற்கொள்வதோடு மாவட்டம்/நகரின் மூலை முடுக்கிற்கும் சென்று பணியாற்ற வேண்டியுள்ளதால் **காவல் ஆளினர்களுக்கு ரூபாய் 3.92 கோடி செலவில் இரு சக்கர வாகனம் வழங்கப்படும்.**

**28. இரண்டு அலை தடுப்பான் வாகனம் (Signal Jammer Vehicles) 20-2500 MHZ வாங்குதல்**

மிக முக்கிய நபர்கள் / பாதுகாக்கப்பட்ட நபர்கள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளும் போது முழுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்யவும், Z + பாதுகாப்பு அளிக்கப்பட்ட பிரமுகர்கள் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், **முதலமைச்சரின் தனிப் பாதுகாப்புப் பிரிவிற்கு உடனடியாக ஜாமர் கருவி பொருத்தப்பட்ட இரண்டு வாகனங்கள் ரூபாய் 4.48 கோடி செலவில் கொள்முதல் செய்யப்படும்.**



**29. சென்னை பெருநகரக் காவலின் எல்லைக்குட்பட்ட பகுதியில் நிறுவப்பட்டுள்ள CCTV கேமராக்களை பராமரித்தல்**

சென்னை பெருநகரக் காவலில் சுமார் 65,000 கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறு நிறுவப்பட்டுள்ள கேமராக்கள் அவ்வப்போது பல்வேறு காரணங்களால் பழுதடைவதால் அவற்றை சரியான முறையில் பராமரித்திட **ரூபாய் 2.50 கோடி** வழங்கப்படும்.

**30. சென்னை பெருநகரக் காவல் போக்குவரத்து பிரிவிற்கு 6 நான்கு சக்கர மற்றும் 6 இரண்டு சக்கர இழுவை வாகனங்கள் வாங்குதல்**

தற்போது சென்னை பெருநகரக் காவல் போக்குவரத்து பிரிவில் பயன்பாட்டில் உள்ள பெரும்பாலான இழுவை வாகனங்கள் மிக நீண்டகால பயன்பாட்டினால் அவற்றின் செயல்

திறன் குறைந்துள்ளது. எனவே போக்குவரத்திற்கு தடை ஏற்படுத்தும் வாகனங்களை அகற்றுவதற்கு மேம்பட்ட வசதிகளுடன் கூடிய இழுவை வாகனங்கள் போக்குவரத்து காவல் பிரிவிற்காக **ரூபாய் 2 கோடி** செலவில் வாங்கப்படும்.

**31. பத்து ஆண்டுகளுக்கு மேலான 68 போக்குவரத்து சமிக்ஞை கம்பங்களை மாற்றுதல் மற்றும் 244 போக்குவரத்து சமிக்ஞை கம்பங்கள் பராமரித்தல்**

சென்னை பெருநகரப் போக்குவரத்து காவலில் 312 சாலை போக்குவரத்து சமிக்ஞை கம்பங்கள் செயல்பட்டு வருகிறது. இப்போக்குவரத்து சமிக்ஞை கம்பங்கள் கடும் காலநிலை காரணிகளுக்கு உட்படுவதால் அடிக்கடி பழுதடைவதால் பத்து ஆண்டுகளுக்கும் மேலான 68 போக்குவரத்து சமிக்ஞை கம்பங்களை மாற்றுவதற்கும் 244 போக்குவரத்து சமிக்ஞை கம்பங்களைப் பராமரிப்பதற்கும் **ரூபாய் 9 கோடி** செலவிடப்படும்.



**32. 312 சாலை சந்திப்புகளில் தொலைதூர போக்குவரத்து சமிக்ஞை கட்டுப்பாட்டு கம்பங்கள் நிறுவுதல்.**

போக்குவரத்து நெரிசல் மிகுந்த நேரங்கள், மருத்துவ அவசர ஊர்திகள், மிக முக்கிய பிரமுகர் வாகனங்கள் மற்றும் பிற அவசர கால வாகனங்களின் இயக்கத்தின்போது போக்குவரத்தின் அளவு மற்றும் ஓட்டத்தைப் பொறுத்து இயக்கிட தொலைதூரக் கட்டுப்பாட்டு கருவி பொருத்தப்பட்ட சமிக்ஞை கம்பங்கள் **ரூபாய் 50 இலட்சம்** செலவில் நிறுவப்படும்.

**33. சென்னை பெருநகரக் காவலில் கடற்கரை ரோந்து பணிக்கு கடற்கரை ரோந்து வாகனங்கள் வாங்குதல்**

தற்போது சென்னை பெருநகரக் காவலில் பயன்பாட்டில் இருந்துவரும் கடற்கரை ரோந்து வாகனங்கள் பழுதடைந்துள்ளதால் கடற்கரை ரோந்து பணிகள் செய்வதில் உள்ள சிரமங்களை கருத்திற்கொண்டு பழைய கடற்கரை ரோந்து வாகனங்களுக்கு பதிலாக நான்கு புதிய கடற்கரை ரோந்து வாகனங்கள் **ரூபாய் 80 இலட்சம்** செலவில் வாங்கப்படும்.

## IV. புதிய பிரிவுகள் / அலகுகள் உருவாக்குதல்

**34. மாநில காவல் தலைமையகத்தில், சமூக ஊடக மையம் (Social Media Centre) ஒன்று அமைத்தல்**

சமூக ஊடகங்களை திறம்பட கண்காணித்து தவறான செய்திகளின் மூலம் ஏற்படும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை சமாளிக்கவும், அவ்வகையான செயல்களுக்கு எதிரான உத்திகளை வகுக்கவும் சென்னையில் உள்ள **மாநில காவல் தலைமையகத்தில் சமூக ஊடக மையம்** (Social Media Centre) **ஒன்று ரூபாய் 3 கோடி** செலவில் அமைக்கப்படும்.



**35. புதிதாக தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அலகுகளை உருவாக்குதல்**

புதிதாக உருவாக்கப்பட்ட **செங்கல்பட்டு, தென்காசி மாவட்டங்களிலும், திருப்பூர் மாநகரிலும், ஆவடி மற்றும் தாம்பரம் மாநகராட்சிகளிலும் புதிதாக தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை அலகுகள் ரூபாய் 8 கோடி** தொடர் செலவினத்தில் உருவாக்கப்படும்.

**36. திருப்பூர் மாவட்டத்தில் புதிதாக க்யூ பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையின் அலகு உருவாக்குதல்**

திருப்பூர் மாவட்டத்தில் 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத்துறை பணிகளை மேற்கொள்ள **புதிய 'க்யூ' பிரிவு குற்றப் புலனாய்வுத்துறையின் அலகு ரூபாய் 1.44 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

**37. தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரத்தில் சிறப்பு புலனாய்வு அலகுகள் உருவாக்குதல்**

தஞ்சாவூர் மற்றும் இராமநாதபுரம் காவல் சரகங்களில் அடிப்படைவாத/பயங்கரவாத அமைப்புகள் தொடர்பான நுண்ணறிவுத் தகவல்களை சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பரப்புதல் பணிகளுக்காக புதிதாக **சிறப்பு புலனாய்வு அலகுகள் ரூபாய் 5.70 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

## V. புதிய பதவிகள் உருவாக்குதல்

**38. சென்னை காவல் ஆணையரகத்தில் இரண்டு காவல் துணை ஆணையர் பதவிகளும், இரண்டு காவல் உதவி ஆணையர் பதவிகளும் உருவாக்குதல்**

சென்னை பெருநகரக் காவல் ஆணையரகம் மூன்றாக பிரிக்கப்பட்டதை அடுத்து, கணினிசார் குற்றப்பிரிவிற்கும், புதிதாக அமைக்கப்படவுள்ள கொளத்தூர் காவல் மாவட்டத்திற்கும், தலா ஒரு காவல் துணை ஆணையர் பதவியும் இரண்டு காவல் உதவி ஆணையர் பதவிகளும் (கொளத்தூர் மற்றும் விருகம்பாக்கம்), **ரூபாய் 2.25 கோடி** செலவில் உருவாக்கப்படும்.



**39. சேலம், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் திருச்சி மாநகரங்களில் காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) பதவிகளை உருவாக்குதல்**

**சேலம், திருநெல்வேலி, திருப்பூர் மற்றும் திருச்சி** காவல் ஆணையரகங்களில் காவல் ஆணையரின் வேலைப்பளுவைக் குறைக்கவும், களப்பணியில் முழுக் கவனத்தை செலுத்த வழி வகுக்கும் வகையிலும் இந்த 4 மாநகரங்களில் தலா ஒரு **காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) பதவி ரூபாய் 1.76 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

**40. சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவில் ஒருகாப்பாளர் பதவியை உருவாக்குதல்**

தொன்மை வாய்ந்த சிலைகளை அடையாளம் கண்டு அதனை மிகச்சரியாக மதிப்பீடு செய்வதற்காக **சிலைத் திருட்டு தடுப்புப் பிரிவினர் கைப்பற்றிய சிலைகளை ஆய்வு செய்ய ஒரு காப்பாளர் பதவி ரூபாய் 6 இலட்சம்** தொடர் செலவினத்தில் உருவாக்கப்படும்.

**41. மாநிலத்திலுள்ள 11 காவல் சரகங்களிலும் தலா ஒரு காவல் துணை கண்காணிப்பாளர் பதவியினை ஏற்படுத்துதல்**

தனிப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை பணிகளை செவ்வனே மேற்கொள்ள மாநிலத்திலுள்ள ஒவ்வொரு சரகத்திலும் தலா ஒரு துணை காவல் கண்காணிப்பாளர் பதவியென 11 பதவியிடங்கள் **ரூபாய் 3.70 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

## VI. கட்டடங்கள் / குடியிருப்புகள் கட்டுதல்

**42. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு மாவட்ட காவல் அலுவலக கட்டடம் கட்டுதல்**

சமீபத்தில் உருவாக்கப்பட்ட **மயிலாடுதுறை மாவட்டத்தில் மாவட்ட காவல் அலுவலகம்** கட்டுவதற்காக தொடரா செலவினமாக **ரூபாய் 15.40 கோடி** வழங்கப்படும்.



**43. கீழ்ப்பாக்கம் துணை காவல் ஆணையருக்காக புதிய அலுவலக கட்டடம் கட்டுதல்**

சென்னை மாநகரம், கீழ்ப்பாக்கம் காவல் துணை ஆணையர் அலுவலகம் தற்போது கீழ்ப்பாக்கம் காவல் நிலைய வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் **கீழ்ப்பாக்கம் துணை ஆணையர் அலுவலகத்திற்கு ரூபாய் 3.16 கோடி செலவில் புதிய கட்டடம்** கட்டப்படும்.

**44. காவலர் பயிற்சி கல்லூரி வளாகத்தில் கணினிசார் குற்றத் தடுப்புப் பிரிவு தலைமையிட கட்டடம் கட்டுதல்**

மாநில கணினிசார் குற்றப் புலனாய்வு மையத்திற்கு காவலர் பயிற்சிக் கல்லூரி வளாகத்தில் **ரூபாய் 20 கோடி** தொடரா செலவினத்தில் **தனியாக புதிய நிர்வாகக் கட்டடம்** கட்டப்படும்.

**45. திருவாரூர் மாவட்டம், முத்துப் பேட்டையில் பாளையம் (Barracks) கட்டப்படும்**

திருவாரூர் மாவட்டம், முத்துப் பேட்டைக்கு, பாதுகாப்பு பணிக்கு வரும் காவலர்கள் தங்குவதற்கு **பாளையம் (Barracks) ஒன்று ரூபாய் 12 கோடி** செலவில் கட்டப்படும்.

**46. சேலூரில் தமிழ்நாடு சிறப்பு காவற்படையின் 15-வது அணிக்கு நிருவாக கட்டடம் கட்டுதல்**

தமிழ்நாடு சிறப்புக் காவற்படையின் 15-வது அணிக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாததால், மழைக் காலத்தில் மிகவும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதோடு, அலுவலகத்தின் அன்றாட பணிகள் பாதிக்கப்படுகின்றன. எனவே, இவ்வணிக்கு **நிருவாக அலுவலகக் கட்டடம் ரூபாய் 5.7 கோடி** செலவில் கட்டப்படும்.



**47. சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் உயர் நீதிமன்றக் காவல் நிலையம் (B4 Esplanade Police Station) மற்றும் தீயணைப்பு நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுதல்**

சென்னை மாநகரம், புரசைவாக்கம் தாலுக்காவில் அமைந்துள்ள சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் **ஒருங்கிணைந்த உயர் நீதிமன்றக் காவல் நிலையம்** (தரை +9 தளம்) மற்றும் **தீயணைப்பு நிலையம்** (தரை + 8 தளம்) கட்டப்படும்.

**48. சென்னை மாநகரத்தில் பி5 துறைமுகம் காவல் நிலையத்திற்கு புதிய காவல்நிலையக் கட்டடம் கட்டுதல்**

சென்னை மாநகரத்தின் **பி5 துறைமுகக் காவல் நிலையம்** தற்போது செயல்பட்டு வரும் பகுதியில் இட நெருக்கடியாக உள்ளதால் அக்காவல் நிலையத்திற்கென புதிய கட்டடம் **ரூபாய் 4.88 கோடி** தொடரா செலவினத்தில் கட்டப்படும்.

**49. கடலூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் 203 குடியிருப்புகள் கட்டுதல்**

கடலூர் மாவட்ட ஆயுதப்படையில் 24 காவல் உதவி ஆய்வாளர்களுக்கும், 155 தலைமைக் காவலர் / காவலர்களுக்கும் காவல் குடியிருப்புகள் கட்டப்படும். தஞ்சாவூர் மாவட்டத்தில், 24 காவலர்கள் / தலைமைக் காவலர்களுக்கு காவல் குடியிருப்புகளும், இவ்விரண்டு மாவட்டங்களிலும் ஆயுதப்படை மற்றும் சட்டம் ஒழுங்கு காவலர்களுக்கான குடியிருப்புகளும் ஆக மொத்தம் **203 புதிய குடியிருப்புகள் ரூபாய் 59.12 கோடி** செலவில் கட்டப்படும்.

**50. விருதுநகர் மற்றும் திருச்சியில் செயல்பட்டு வரும் தனிப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்காக புதிய கட்டடங்கள் கட்டுதல்**

விருதுநகர் மாவட்டம் மற்றும் திருச்சி மாநகரில் தனிப்பிரிவு **குற்றப் புலனாய்வுத்துறை அலுவலகங்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. ஆகவே, இந்த அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் ரூபாய் 2.25 கோடி** செலவினத்தில் கட்டப்படும்.



**51. பழைய காவல் ஆணையர் அலுவலக வளாகத்தில் 25 குதிரை லாயங்கள் கட்டுதல்.**

சென்னை, புதுப்பேட்டையில் உள்ள குதிரை லாயம் மிகவும் பழமையானதாகவும் பாழடைந்த நிலையில் உள்ளதாலும், குதிரைகளை பராமரிப்பதில் சிரமம் ஏற்படுவதோடு, கால்நடைகளுக்கு பாதுகாப்பற்றதாகவும் இருப்பதால், சென்னை எழும்பூரில் உள்ள **பழைய காவல் ஆணையர் வளாகத்தில் புதிதாக 25 குதிரை லாயங்கள் ரூபாய் 3 கோடி** செலவில் கட்டப்படும்.

**52. காவலர் குடியிருப்புகளில் ஏற்பட்ட பழுதுபார்ப்புப் பணிகளுக்காக சிறப்பு நிதி வழங்குதல்.**

காவலர் குடியிருப்புக் கட்டடங்களில் பல்வேறு குடியிருப்புகள் பழுதடைந்த காரணத்தால் அவை பயன்பாட்டில் இல்லாமல் உள்ளது. ஆகவே 4,631 **காவலர் குடியிருப்புகளில் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிகள்** மேற்கொண்டு அக்குடியிருப்புகளை பயன்பாட்டிற்குக் கொண்டுவருவதற்காக **ரூபாய் 20 கோடி** சிறப்பு நிதி நடப்பாண்டில் வழங்கப்படும்.

## VII. பொதுமக்கள் காவலர் நல்லுறவு

**53. அனைத்து மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் மாநகர காவல் ஆணையர் அலுவலகங்களிலும் இரு வாரங்களுக்கு ஒரு முறை பொதுமக்கள் குறைதீர் கூட்டம் நடத்தப்படும்**

மாநகர காவல் ஆணையர் / மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகங்களில் **இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை** பொதுமக்களின் குறைகளை கேட்டறியும் வகையில் **குறைதீர் கூட்டங்கள்** நடத்தப்படும். அச்சமயம், காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையர்கள் பொதுமக்களின் குறைகளை நேரடியாக கேட்பதுடன் அவர்களின் மனுக்களையும் பெற்றுக் கொள்வார்கள். அப்போது முந்தைய மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்படும்.



**54. மாணவர்கள் மற்றும் காவலர்கள் நல்லுறவை மேம்படுத்தும் வகையில், சமுதாயத்தில் மாணவர்களை செம்மைப்படுத்தும் வகையில் மாணவர் காவல் படைத் திட்டம் (Student Police Cadet programme) மேலும் 5 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்**

காவல்துறைக்கும், மாணவர் சமூகத்திற்கும் இடையே உள்ள இடைவெளியை குறைக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட, **மாணவர் காவல் படைத் திட்டம்** (Student Police Cadet Programme), முதலில் சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் ஆகிய மூன்று மாவட்டங்களிலும், பின்னர் வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. இத்திட்டம் **மேலும் 5 மாவட்டங்களுக்கு ரூபாய் 2 கோடி** செலவில் விரிவுபடுத்தப்படும்.

**55. மாநிலத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு கணினிகள் மற்றும் துணைக்கருவிகள் வழங்குதல்**

காவல் நிலையத்தில் விசாரணை மற்றும் பிற பணிகளை மேற்கொள்ள கணினிகள், அச்சுப்பொறிகள் போன்ற இன்றியமையாதவற்றை மாநிலத்தில் உள்ள **1507 காவல் நிலையங்களுக்கும் ரூபாய் 23 கோடி** செலவில் வழங்கப்படும்.

**56. கடவுச்சீட்டு சரிபார்ப்பிற்காக கையடக்கக் கணினிகள் வாங்குதல்**

மக்களுக்கு **விரைவாகவும் வெளிப்படைத் தன்மையுடனும் கடவுச் சீட்டுகளை வழங்க,** பழைய கையடக்கக் கணினிகளுக்கு பதிலாக **1850 புதிய 6 அங்குல கையடக்கக் கணினிகள் ரூபாய் 4.70 கோடி** செலவில் அனைத்து காவல் நிலையங்களுக்கும் வழங்கப்படும்.



**57. முதன்மைக் கட்டுப்பாட்டு அறைக்கான மொபைல் சாதனங்களை மாற்றுவதற்கு நிதி வழங்குதல்**

அவசர உதவிகளுக்காக 100/112 எண்ணைத் தொடர்பு கொள்ளும் பொதுமக்களின் அழைப்புகளுக்கு விரைவாகப் பதிலளிப்பதற்காக SPMCR திட்டத்தின் கீழ், 1200 எண்ணிக்கையிலான சமீபத்திய ஸ்மார்ட்போன் அடிப்படையிலான சாதனங்களை வாங்கி, மாவட்டங்கள்/நகரங்களில் ரோந்து செல்லும் வாகனங்கள்/ காவல்துறை அதிகாரிகளுக்கு **ரூபாய் 2.01 கோடி** செலவில் வழங்கப்படும்.

**58. ஐ.பி.எஸ் அல்லாத அதிகாரிகளின் ஆண்டு செயல் திறன் அறிக்கைகளை பதிவு செய்வதற்கான SPARROW மென்பொருள் வாங்குதல்**

வருடாந்திர இரகசிய மதிப்பீட்டு அறிக்கையின் வெளிப்படைத் தன்மையை பேணவும், தற்போதைய நடைமுறை சிக்கல்களை எளிமையாக்கி விரைவுபடுத்தவும், காவல் அதிகாரிகள் / ஆளினர்களின் குறைகளை போக்கவும், SPARROW எனப்படும் மென்பொருள் செயலியை ஐ.பி.எஸ் அல்லாத காவல் அதிகாரிகள் மற்றும் ஆளினர்களுக்கும் வருடாந்திர இரகசிய மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்க **ரூபாய் 2.45 கோடி** செலவில் நடைமுறைப்படுத்தப்படும்.



**59. தொழில்நுட்ப நுண்ணறிவுப் பிரிவிற்கு வன்பொருள் வாங்குதல்**

நுண்ணறிவுப் பிரிவில் உள்ள தொழில்நுட்ப நுண்ணறிவுப் பிரிவில் பல்வேறு தரப்பிலிருந்து நுண்ணறிவுத் தகவல்கள் பெறப்படுகின்றன. எண்முறைத் தரவுகளாக கிடைக்கப் பெறும் தகவல்கள் பொது வடிவில் மாற்றம் செய்து தற்போதைய மற்றும் வருங்கால பயன்பாட்டிற்காக தகவல் சேகரிப்பு சாதனங்களில் சேகரிக்கப்படுகின்றன. இத்தகைய பணிகள் **வன்பொருள் துணையுடன் மேற்கொள்ள தரவுகளை சேமித்து வைக்கவும், விரிவாக்கம்** செய்யவும் **ரூபாய் 60 இலட்சம்** செலவிடப்படும்.

**60. சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை நிர்வகிக்க கூகுள் நிலப்படம் மூலம் தானியங்கி எச்சரிக்கை அமைப்பை உருவாக்குதல்**

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலை நிர்வகிக்க தானியங்கி எச்சரிக்கை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். இவ்வமைப்பு குறிப்பிட்ட கால இடைவெளியில் கூகுள் நிலப்பட செயலியிடம் அவ்வப்போது வினவி குறிப்பிட்ட இடத்தின் போக்குவரத்து நிலவரத்தை மதிப்பிடுகிறது. நெரிசலின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் நெரிசலின் தன்மை குறித்து இணைய அறிவிப்பின் மூலம் தெரிந்துகொள்ள முடியும். இவ்வமைப்பு மிக முக்கிய பிரமுகர்களின் வழித்துணை பாதுகாப்பின் போது ஏற்படும் குறைபாடுகளை களையவும் பயன்படும். இதற்கான செலவினம் **ரூபாய் ஒரு கோடி** ஆகும்.



# தடய அறிவியல் துறை

**61. கோயம்புத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் புதியதாக தடய மரபணு ஆய்வுப் பிரிவை உருவாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்**

அறிவியல் சார் குற்றப் புலனாய்வை திறம்பட மேற்கொள்ளுவதற்கு ஏதுவாக விரைந்து ஆய்வு மேற்கொண்டு தடயவியல் அறிக்கை வழங்க மேற்கு மண்டலத்தில் உள்ள **கோயம்புத்தூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ரூபாய் 7.80 கோடி செலவில் தடயவியல் மரபணு ஆய்வுப் பிரிவு உருவாக்கப்படும்.** மேலும், கணினி தடயவியல் குற்ற புலனாய்வில் சந்திக்கும் பல சவால்களை ஏற்க ஏதுவாக இவ்வாய்வக **கணினி தடயவியல் ஆய்வின் திறன் மேம்படுத்தப்படும்.**

**62. புதியதாக உருவாக்கப்பட்டுள்ள தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்களுக்கு இரண்டு புதிய இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்களை உருவாக்குதல்**

குற்றம் நடந்த குறுகிய காலத்திற்குள் குற்ற நிகழ்விட ஆய்விற்கு செல்வதற்கும் குற்ற நிகழ்விடத்தில் குற்ற

புலனாய்வாளர்களுக்கு அறிவியல்சார் உதவிபுரிய ஒவ்வொரு காவல் ஆணையரகத்திலும் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகம் அமைப்பது அவசியமாகிறது. ஆகவே **தாம்பரம் மற்றும் ஆவடி காவல் ஆணையரகங்களுக்கு புதிய தடய அறிவியல் ஆய்வகங்கள் ரூபாய் 1.07 கோடி** செலவில் உருவாக்கப்படும்.

**63. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போக்சோ சட்டம் தொடர்பான வழக்குகள் சம்பந்தப்பட்ட சான்றுப் பொருட்களை ஆய்வு செய்ய பிரத்யேக அலகு ஒன்று சென்னை தலைமை ஆய்வகத்தில் உருவாக்குதல்**

பெண்களுக்கெதிரான குற்றங்கள் மற்றும் போக்ஸோ வழக்குகள் தொடர்பாக பெறப்படும் சான்று பொருட்கள் பல மடங்கு அதிகரித்துள்ளது. எனவே, இவ்வழக்குகள் சம்பந்தப்பட்ட சான்று பொருட்களை விரைந்து ஆய்வு செய்து தடய அறிவியல் ஆய்வறிக்கை சமர்ப்பிக்க ஏதுவாக **கணினி தடயவியல் பிரிவில் பிரத்யேக அலகு ஒன்று ரூபாய் 3.71 கோடி** செலவில் உருவாக்கப்படும்.



**64. மதுரை வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகத்தில் பெறப்படும் உயிரியல் மாதிரிகளின் மரபணு விவரங்களை பெறுவதற்கான அதி நவீன மரபியல் ஆய்வுக் கருவி வாங்குதல்**

குற்ற வழக்குகள் தொடர்பான உயிரியல் மாதிரிகளைத் தடையின்றி ஆய்வு மேற்கொள்வதற்கு **அதி நவீன மரபியல்** கருவி ஒன்று **ரூபாய் 1.20 கோடி** செலவில் வாங்கப்படும்.

**65. சென்னைத் தலைமை ஆய்வகத்தின் ஆய்வுத் திறனை வலுப்படுத்த LC-MS எனும் அதிநவீன ஆய்வுக் கருவி வாங்குதல்**

உயிரியல் மாதிரிகளில் காணப்படும் போதை மருந்து மற்றும் நஞ்சுப் பொருட்களை அடையாளம் காண நவீன LC-MS கருவி ஒன்று **ரூபாய் 2.50 கோடி** செலவில் வாங்கப்படும்.

**66. மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகங்களை ISO/IEC 17025 : 2017 சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துதல்**

சென்னை தலைமை ஆய்வகம் ISO / IEC 17025:2017 தரச் சான்றிதழ் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு விரைவில் இந்திய தரச்சான்று பெறும் நிலையில் உள்ளது. இரண்டாம் கட்டமாக மதுரை, தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய மூன்று வட்டாரத் தடய அறிவியல் ஆய்வகங்களை ISO / IEC 17025:2017 -ன்படி சர்வதேச தரத்திற்கு **ரூபாய் 3.10 கோடி** செலவில் மேம்படுத்தப்படும்.



# தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை

**67. தீயணைப்பு பணியாளர்களுக்கு இடர்ப்படி உயர்த்தி வழங்கப்படும்**

காவல்துறை பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் இடர்ப்படி உயர்த்தி வழங்கப்பட்டதைப் போன்று நிலைய அலுவலர் மற்றும் அதன் கீழ்பணி நிலையிலுள்ள தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இடர்ப்படி **ரூபாய் 800 லிருந்து ரூபாய் 1000 ஆகவும்** உதவி மாவட்ட அலுவலர் மற்றும் மாவட்ட அலுவலர் நிலையில் உள்ள பணியாளர்களுக்கு **ரூபாய் 900 லிருந்து ரூபாய் 1000 ஆகவும்** உயர்த்தி வழங்கப்படும். இதற்கான **தொடர் செலவினம் 1.83 கோடி** ஆகும்.

**68. தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மிகைப்பணி ஊதியத்தை உயர்த்தி வழங்குதல்**

நிலைய அலுவலருக்கு கீழுள்ள தீயணைப்பு பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் **மிகைப்பணி ஊதியம் ரூ.200 லிருந்து ரூ. 500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.** இதற்கான தொடர் செலவினம் **ரூ. 1.01 கோடி** ஆகும்.

**69. தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறை தலைமையகத்தில் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் என்ற புதிய பணியிடம் உருவாக்கப்படும்**

நிதி மேலாண்மையை கருத்திற் கொண்டும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறையின் செயல்பாட்டினை வலுப்படுத்தும் விதத்திலும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மை கணக்கு அலுவலர் என்ற புதிய பணியிடம் ஒன்று தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை தலைமையகத்தில் உருவாக்கப்படும். மேற்படி பணி இடத்தில் சார்பு செயலாளர் தரநிலையில் தலைமைச் செயலகத்திலிருந்து அயல் பணியில் நியமிக்கப்படுவார்கள்.



**70. மாவட்டத் தலைமையகத்தில் உள்ள நிலைய அலுவலர் பதவிகளை உதவி மாவட்ட அலுவலர் தரத்திற்கு தரம் உயர்த்துதல்.**

நிர்வாக நலனை முன்னிட்டு மாவட்ட தலைநகரங்களில் உள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்களில் உள்ள **39 நிலைய அலுவலர் பதவிகள் உதவி மாவட்ட அலுவலர் தரத்திற்கு தரம் உயர்த்தப்படும்.** இதற்கான தொடர் செலவினம் **ரூபாய் 18 இலட்சம்** ஆகும்.

## II. புதிய முயற்சிகள்

**71. கோயம்புத்தூரினை தலைமையிடமாகக் கொண்ட மேற்கு மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து சேலத்தினை தலைமையகமாக கொண்டு புதிய மண்டலம் ஒன்று உருவாக்கப்படும்**

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையின் நிர்வாக சீரமைப்பின் ஒரு பகுதியாக கோயம்புத்தூரினை தலைமையிடமாகக்

கொண்ட மேற்கு மண்டலத்தினை இரண்டாகப் பிரித்து **சேலத்தினை தலைமையகமாக கொண்டு புதிய மண்டலம்** ஒன்று இந்த நிதியாண்டில் துவங்கப்படும்.

**72. செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில் முதற்கட்டமாக ரூ. 19.30 கோடி செலவில் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கூடிய மாநில பயிற்சி கழகம் ஒன்று புதிதாக நிறுவப்படும்**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை பணியாளர்களின் பயிற்சி வசதிகளை நவீனப்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம் காலவாக்கத்தில் முதற்கட்டமாக ரூ. 19.30 கோடி செலவினத்தில் 300 எண்ணிக்கையிலான பயிற்சியாளர்கள் தங்கும் கூடங்கள் (Dormitories) பயிற்சி மைதானம் (Parade ground)



சமையற்கூடம் மற்றும் உணவுக்கூடம் (Kitchen cum dining halls), மாதிரி தீயணைப்பு மற்றும் மீட்புபணி நிலையம் மற்றும் மின்வசதி, சாலைவசதி, கழிவுநீர் வசதி உள்ளிட்ட **அடிப்படை வசதிகளுடன் கூடிய மாநில பயிற்சி கழகம்** (Tamil Nadu Fire and Rescue Services Academy) ஒன்று புதியதாக நிறுவப்படும்.

## III. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் / குடியிருப்புகள் கட்டுதல்

**73. கீழ்க்கண்ட 2 இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் பணியாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் ரூபாய் 21 கோடி செலவில் கட்டப்படும்**

1. சிவகாசியில் ஒரு நிலைய அலுவலர் மற்றும் 32 பணியாளர் குடியிருப்புகள் **ரூபாய் 5.86 கோடி** செலவில் கட்டப்படும்.

2. சென்னை பெரும்பாக்கத்தில் 40 பணியாளர் குடியிருப்புகள் **ரூபாய் 15.20 கோடி** செலவில் கட்டப்படும்.



**74. கீழ்க்கண்ட 6 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் ரூபாய் 11 கோடி செலவில் நிறுவுதல்**

விழுப்புரம் மாவட்டம் - அன்னியூர், மதுரை மாவட்டம் - திருப்பரங்குன்றம், விருதுநகர் மாவட்டம் - ஏழாயிரம் பண்ணை, சென்னை புறநகர் மாவட்டம் - கொளத்தூர், செங்கல்பட்டு மாவட்டம் - காலவாக்கம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டம் - கண்ணமங்கலம் ஆகிய 6 இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி நிலையங்கள் **ரூபாய் 11 கோடி** செலவில் நிறுவப்படும்.

**75. தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையங்களை ரூபாய் 4.35 கோடி செலவில் மேம்படுத்துதல்**

கிருஷ்ணகிரி மாவட்டம் - ஓசூர், செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம் மற்றும் இராணிப்பேட்டை மாவட்டம் - இராணிப்பேட்டை ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்பு பணி நிலையங்கள் **ரூபாய் 4.35 கோடி** செலவில் மேம்படுத்தப்படும்.

**76. கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு**

கட்டடப் பராமரிப்புப் பணிகளுக்காக தற்போது வருடந்தோறும் ஒதுக்கப்படும் **ரூபாய் 1.04 கோடியுடன்** சேர்த்து மேலும் **ஒரு கோடி ரூபாய்** கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## IV. புதிய வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல்

**77.** i. ரூபாய் 37.50 கோடி செலவில் **50 புதிய நீர்தாங்கி வண்டிகள்**

ii. ரூபாய் 16 கோடி செலவில் **20 பெரும தண்ணீர் லாரிகள்** (water bowzers)

iii. ரூபாய் 80 இலட்சம் செலவில் சென்னை வண்ணாரப்பேட்டை தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையத்திற்கு புதிய **சிறிய வகை நுரை தகர்வு நீர் தாங்கி வண்டி** (Small Foam Tender)



iv. ரூபாய் 3 கோடி செலவில் 500 **தீப்பாதுகாப்பு கவச உடைகள்**

v. ரூபாய் 2 கோடி செலவில் 200 **மூச்சுக் கருவிகள்**

vi. ரூபாய் 60 கோடி செலவில் சென்னையிலுள்ள வண்ணாரப் பேட்டை, கோயம்பேடு, துரைப்பாக்கம் ஆகிய 3 இடங்களுக்கு **70 மீட்டர் உயரம் செல்லக்கூடிய வான் நோக்கி உயரும் நகரும் ஏணியுடன் கூடிய நவீன தீயணைப்பு மீட்பு ஊர்தி** (Aerial Ladder Platform Vehicle) வழங்கப்படும்.

## 78. தீ ஆணையம் (Fire Commission) ஒன்று புதியதாக அமைத்தல்

தீ மற்றும் உயிர் மீட்புப் பணிகளில் புதிய தொழில்நுட்ப நுணுக்கங்களை செயல்படுத்தவும், கட்டடங்களுக்கு வழங்கப்படும் தீப்பாதுகாப்பு சான்றிதழ் வழங்குதல் தொடர்பான பணிகளை முறைப்படுத்தவும், தீயணைப்பு மற்றும் மீட்பு பணித் துறை பணியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டும் அவர்களுக்குத் தேவையான திட்டங்களையும், புதிய பயிற்சி முறைகளையும் பரிந்துரைக்கும் நோக்கத்துடன் **தீ ஆணையம்** (Fire Commission) ஒன்று புதியதாக அமைக்கப்படும்.

**மு.க. ஸ்டாலின்**

**முதலமைச்சர்**



அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை - 600 001.